பக்கங்கள் 17+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | ஆனி 16 திங்கட்கிழமை 30.06.2025 | அதிர்வு 331

## ஆலையடிவேம்பு பிரதேச சபையும் தமிழரசு வசம்!



(விரிவான செய்தி 4 ஆம் பக்கம்)

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### வடக்கு, கிழக்கில்

# 34 சபைகளில் தமிழரசு ஆட்சி!

## மாபெரும் வெற்றிக்காக அயராது உழைத்த அனைவருக்கும் சுமந்திரன் நன்றி தெரிவிப்பு

"வடக்கு, கிழக்கில் 34 சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நிர்வாகங்களை அமைத்துள்ளது. இந்த மாபெரும் வெற்றிக்காக அயராது உழைத்த எமது கட்சியின் தலைவர், மத்திய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள், அபிமானிகள் ஆகியோருக்கும், எமது வேட்பாளர்கள் அனைவருக்கும் கட்சி சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேவேளை, நிர்வாகங்களை அமைப்பதில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய மற்றைய கட்சியினருக்கும் எமது நன்றிகள்." 05

## ஷிராந்தி கைதாவதைத் தடுக்க மஹிந்த முயற்சியா?



### மொட்டுக் கட்சி அடியோடு மறுப்பு

ஷிராந்தி ராஜபக்ஷ கைது செய்யப்படுவதைத் தடுப்பதற்கு மகாநாயக்க தேரர்களின் உதவியை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரினார் என வெளியாகும் தகவலை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி முற்றாக நிராகரித்துள்ளது.

"இது முற்றிலும் போலியான தகவலாகும். ஆளுங் கட்சியால் திட்டமிட்ட அடிப்படையில் பரப்படும் வதந்தியாகும்." – என்று மொட்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.





# நெடுந்தீவு பிரதேச சபையின் ஆட்சி அதிகாரமும் தமிழரசிடம்

## தவிசாளராக சங்கரப்பிள்ளை சத்தியவரதன் ஏகமனதாகத் தெரிவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சத்தியவரதன் ஏகமனதாகத் தெரிவானார்.

நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று நெடுந்தீவு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவிக்காக இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் முன்மொழியப்பட்ட சங்கரப்பிள்ளை சத்தியவரதன் ஏகமனதாகத் தெரிவானார்.

உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் முன்மொழியப்பட்ட செபஸ்ரியன் விமலதாஸ் தெரிவானார்.

13 உறுப்பினர்களை கொண்ட நெடுந்தீவு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

இலங்கைத் தமிழரசுக் கட்சி 6 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 4 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி இரண்டு ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தது.





### இ.தொ.காவின் ஆதரவுடன்

# ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் ஆட்சியைக் கைப்பற்றியது என்.பி.பி.

## உப தவிசாளராக இராமையா ருசன்ஸ்குமார் தெரிவு

ஹங்குரன்கெத்த பிரதேச சபையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவுடன் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்துள்ளது.

ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான விசேட அமர்வு, மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எம்.கே.சி.கே அத்தபத்துவின் தலைமையில் இன்று ஹங்குரன்கெத்த பிரதேச சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பகிரங்க வாக்கெடுப்பின் ஊடாக ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் தவிசாளராக தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஜயசேகர முதியன்சேலாகே அராவே கெதர லயனல் குணரத்ன தெரிவானார்.

அதையடுத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் இராமையா ருசன்ஸ்குமார் 22 வாக்குகளைப் பெற்று உப தவிசாளரானார்.



ஹங்குரன்கெத்த பிரதேச சபைக்காக 42 உறுப்பினர்கள் தேர்வாகி சபை உறுப்பினர் அங்கீகாரம் பெற்றுள்ளனர்.

ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் உறுப்பினர் பங்கீட்டு விவரம் வருமாறு:-

- தேசிய மக்கள் சக்தி – 20
- இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் – 2
- ஐக்கிய தேசியக் கட்சி – 3
- பொதுஜன ஐக்கிய முன்னனி – 1
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – 4
- ஐக்கிய மக்கள் சக்தி – 9
- சர்வஜன அதிகாரம் – 1
- சுயாதீனக் குழு 1 – 1
- சுயாதீனக் குழு 2 – 1



# மூன்று வயது ஆண் குழந்தை பஸ் மோதி பரிதாப மரணம்!

## மட்டு. ஆரையம்பதியில் துயரம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, ஆரையம்பதி – காளிகோவில் வீதியில் பஸ் மோதி 3 வயது ஆண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

ஆடைத்தொழிற்சாலைக்கு வேலைக்குச் செல்வதற்காக பஸ்ஸில் ஏற முற்பட்ட தாய்க்குப் பின்னால் சென்ற ஆண் குழந்தை மீதே பஸ் மோதியுள்ளது.

இந்தத் துயரச் சம்பவம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆரையம்பதி, முதலாம் பிரிவு, காளிகோவில் வீதியைச் சேர்ந்த பிரகாஷ் றிகோஸ்வரன் (வயது 3) என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது




சடலத்தை ஆரையம்பதி வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், பஸ் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆலையடிவேம்பு பிரதேச சபையும் தமிழரசு வசம்!





(வடிவேல் டினேஸ்)

அம்பாறை மாவட்டம் ஆலையடி வேம்பு பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

ஆலையடிவேம்பு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவு இன்று ஆலையடிவேம்பு பிரதேச சபையில் இடம்பெற்றது.

இதன்போது பகிரங்க வாக்கெடுப்பு ஊடாக இலங்கைத் தழிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஆர்.பிரரேமதாச தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும், உப தவிசாளராக அன்னாசி சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக் குழுவின் தலைவரான தனம் சமூக சேவை அமைப்பின் ஸ்தாபகர் கணேசபிள்ளை ரகுபதி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

---



# மட்டு. கிரான்குளத்தில் மரத்துடன் மோதி பஸ்

## மூவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

(கனகராசா சரவணன்)

கதிர்காமத்தில் இருந்து மட்டக் களப்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ், வேகக் கட்டுப்பாட்டை இழந்து மட்டக்களப்பு – கிரான்குளத்தில் மரத் துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இன்று திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் மூவர் படுகாயடைந்துள்ளனர் என்று காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கதிர்காமத்தில் இருந்து மட்டக்களப் புக்கு விசேட போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வரும் குறித்த பஸ், கதிர்காமத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி, கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை சென்றவர்களை ஏற்றிக்கொண்டு பயணித்தது.

இந்நிலையில், கல்முனை – மட்டக்களப்பு வீதியிலுள்ள கிரான்குளம் தபால் கந்தோருக்கு அருகாமையில் இன்று அதிகாலை 4.30 மணியளவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ், வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மூவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் வீடு ஒன்றில் தீ விபத்து!

## தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக தவறுதலாகப் பெற்றோலைப் பயன்படுத்திய வீட்டார்



**(கி.வசந்தன்)**

வவுனியா, பண்டாரிக்குளத்தில் உள்ள வீடு ஒன்றில் தீ பற்றிய சம்பவம் பதிவாகியுள்ளது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் சாமி அறையில் விளக்கு ஏற்றுவதற்காகத் தேங்காய் எண்ணெய்யைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக தவறுதலாகப் பெற்றோலைப் பயன்படுத்தியமையாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

அந்த வீட்டார் இது தொடர்பாக வவுனியா மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு அறிவித்த நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற தீயணைப்புப் பகுதியினர் பொதுமக்களின் உதவியுடன் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பெற்றோல் தட்டுப்பாடு ஏற்படும் எனக் கருதி சாமி அறைக்குள் சேமித்து வைக்கப்பட்டிருந்த பெற்றோலையே மாறி தேங்காய் எண்ணெய் என நினைத்து வீட்டார் பயன்படுத்தியுள்ளமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# புதிய அலை கலை வட்ட இளைஞர் அணியின் ஹைக்கூ கவியரங்கம்

புதிய அலை கலை வட்டத்தின் இளைஞர் அணி மாதாந்தம் நடத்தத் திட்டமிட்டுள்ள ஹைக்கூ கவியரங்கத்தின் இரண்டாவது அமர்வு எதிர்வரும் 13ஆம் திகதி மாலை 4.30 மணிக்குக் கொழும்பு - 13, புதுச்செட்டித்தெருவில் அமைந்துள்ள எக்ஸலனஸ் சர்வதேச பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கவியமர்வுக்கு ஆசிரியரும் கவிஞருமான எஸ்.அழகேஸ்வரன் தலைமை ஏற்கின்றார்.

இதில் இணைந்து கொண்டு ஹைக்கூ கவிதை பாட விரும்புவோர் அன்றைய தினம் நேரில் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் புதிய அலை கலை வட்டத்தின் இளைஞர் அணியின் தலைவர் ஷெரோனுடன் 0751670825 என்ற இலக்கத்தில் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.




# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**34 சபைகளில்...**

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் இன்று அவர் மேலும் கூறுகையில்,

"வடக்கு, கிழக்கில் கடைசியாக இரண்டு சபைகள் இன்று அமைக்கப்பட்டுள்ளன. நெடுந்தீவு மற்றும் ஆலையடிவேம்பு ஆகிய இரண்டிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி நிர்வாகத்தை அமைத்திருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி 58 சபைகளில் போட்டியிட்டாலும், 12 சபைகளில் தமிழ் மக்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவாகவே இருக்கின்றார்கள். ஒன்று அல்லது இரண்டு பிரதிநிதிகளைப் பெறுவதற்காகவே அவற்றில் நாம் போட்டியிட்டோம். அப்படிப் போட்டியிட்டுப் பிரதிநிதித்துவத்தையும் பெற்றும் கொண்டோம்.

மிகுதி 46 சபைகளில் 34 சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நிர்வாகங்களைஅமைத்துள்ளது.ஆகவே,58சபைகளில், 46 இல் எமது இலக்கை அடைந்துள்ளோம். மிகுதி சபைகளிலும் இரண்டாவது இடத்தை வகிக்கின்றோம்.

இது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த பெரு வெற்றி என்பதற்கு அப்பால், மக்கள் எமக்குக் கொடுத்திருக்கும் ஆணையாக நாம் ஏற்றுக்கொண்டு உள்ளூராட்சி சபைகளின் முழு அதிகாரங்களையும் உபயோகித்து மக்களுக்குச் சேவையாற்றுவோம்.

இந்த மாபெரும் வெற்றிக்காக அயராது உழைத்த எமது தலைவர், மத்திய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள், அபிமானிகள் ஆகியோருக்கும், எமது வேட்பாளர்கள் அனைவருக்கும் கட்சி சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்தோடு நிர்வாகங்களை அமைப்பதில் ஜனநாயகத் தீர்ப்புக்களை மதித்து தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகளில் எம்மோடு ஒத்துழைத்த மற்றைய கட்சியினருக்கும் எமது நன்றிகள்." - என்றார்.





# செங்கோலுடன் இன்று ஆரம்பமாகிய வவுனியா மாநகர சபையின் முதல் அமர்வு

**(கி.வசந்தன்)**

வவுனியா மாநகர சபையின் முதலாவது அமர்வு செங்கோலுடன் நடைபெற்றது.

மாநகர சபை மண்டபத்தில் இன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அமர்வு நடைபெற்றது.

மாநகர மேயர் சு.காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த அமர்வில் துணை மேயர் ப.கார்த்தீபன், மாநகர ஆணையாளர் தெ.ரதீஸ்வரன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மாநகர சபையின் முதலாவது அமர்வில் செங்கோல் சகிதம் மேயர் சபை மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டு அமர்வு ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அமர்வில் குழுக்கள் அமைப்பு மற்றும் வவுனியா மாநகரில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# உண்மைகள் வெளிவருமா?

“மன்னார் மற்றும் கொக்குத்தொடுவாய் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் கைவிடப்பட்டமை போல் செம்மணி மனிதப் புதைகுழியையும் மூடி மறைக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.”- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

அவரது இந்த உறுதிமொழி நடைமுறை சாத்தியமானதா, செம்மணியில் புதைக் கப்பட்டவர்கள் பற்றிய விடயங்கள் முழு மையாக அம்பலமாகுமா என்பதற்குக் காலம்தான் பதில் கூற வேண்டும்.

ஆனாலும், வடக்கில் இத்தகைய பல மனிதப்புதைப் குழிகள் தாராளமாகப் பரவிக் கிடக்கின்றன என்பதுதான் பொது வான கருத்து நிலைப்பாடு. வடக்கில் காணாமலாக்கப்பட்ட பல்லாயிரம் பேர் இத்தகைய புதைகுழிகளுக்குள்தான் மீளா உறக்கம் கொண்டிருப்பார்கள்.

ஆயினும், வடக்கில் மிகத் தெளிவாக - மிகத் துலக்கமான - ஆதாரங்களுடன் வெளிபட்ட இரண்டு பெரிய மனித புதை குழிகள் தொடர்பில் எந்த நடவடிக்கை யும் இதுவரை காலமும் எடுக்கப்படாமல், அவை அடிபட்டுப் போக விடப்பட்ட மையே எமது அனுபவமாக இருக்கின்றது.

90களின் பிற்பகுதியில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் அதன் பார்வை யாளர் கட்டடத்துக்குப் பக்கத்தில் ஒரு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. அப்போதைய யாழ் நீதிவான் ஏகநாதன் அவ்விடயத்தில் நேரடியாக தலையிட்ட மையால் அவர் முன்னிலையில் விடயங்கள் வெளிக் கொணரப்பட்டன. சுமார் இருபது எலும்புக்கூடுகள் வரை மீட்கப்பட்டன. சான்றாதாரங்களான அந்த எலும்புக்கூடு களும் அந்த விடயத்தை ஒட்டிய சட்டக் கோவைகளும் இப்போது எங்கு இருக் கின்றன என்பது கடவுளுக்குத்தான் தெரி யும். சுமார் கால் நூற்றாண்டு கடந்து விட்ட மையால் அவை இனி சட்டத்திற்கு முன் எடுக்கப்படுமா என்பது கேள்விக்குறியே. இந்தியப் படையினர் வடக்கில் நிலை கொண்டு, யாழ்ப்பாணம் கோட்டையை மையமாக வைத்து ஆரம்பத்தில் இயங் கிய சமயத்தில் - அவர்களுடைய படைகள் துரையப்பா விளையாட்டரங்கப் பகுதி யில் நிலை கொண்டு இருந்த காலத்தில் - இந்தப் புதைக்குழி உருவாகி இருக்க லாம் என்று பேச்சு அப்போதே இருந்தது. ஆனால் அந்தப் புதைக்குழி தொடர்பான நடவடிக்கைகள் புதைகுழியை அகழ்ந்த செயற்பாட்டோடு முடங்கிப் போனமை யால் அந்த விவகாரமும் புதைகுழிக்குள் போனது.

அதேபோல 90 களின் பிற்பகுதியில், இராணுவம் குடாநாட்டை மீண்டும் கைப் பற்றிய பின்னர் கிருஷாந்தி குமாரசுவாமி மீதான பாலியல் வல்லுறவு மற்றும் அவரும் அவரது குடும்பத்தவர்களும் படுகொலை யுண்ட விடயத்தில் பிரதான சூத்திர தாரியாகக் கருதப்பட்டு, ஏனைய நான்கு இராணுவத்தினருடன் சேர்ந்து மரண தண்டனை விதிக்கப்பட்டு, இப்போது வரை அந்தத் தண்டனையை எதிர்பார்த்து சிறையில் இருக்கும் சோமரத்ன ராஜபக்ஷ என்ற முன்னாள் இராணுவச் சிப்பாய் செம்மணியில் அடையாளம் காட்டிய இடத்தில் பதினைந்துக்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப் பட்டன.

இந்த விவகாரம் தொடர்பிலும் ஆரம்பத் தில் மும்முரமாக நடவடிக்கை எடுக்கப் படுவதாகக் காட்டப்பட்டது. 20 இராணு வத்தினர் வரை கைதாகி பின்னர் பிணை யில் விடுவிக்கப்பட்டனர். 2000ஆம் ஆண் டில் அவர்களில் சிலருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். அவர்களின் கடவுச்சீட்டுகளும் முடக்கப்பட்டன. வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

ஆயினும், அந்த ஆண்டு நடுப் பகுதி யிலேயே அவர்கள் கொழும்பு மேல் நீதி மன்றத்தில் விண்ணப்பித்து பிணை பெற்ற னர். அவர்களின் கடவுச் சீட்டுகள் திருப்பி வழங்கப்பட்டன. வெளிநாட்டுப் பயணத் தடைகள் நீக்கப்பட்டன. பல இராணு வத்தினர் மீண்டும் சேவையில் சேர்க்கப் பட்டு இப்போது ஓய்வூதியமும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்கு வருடத்திற்கு ஒரு தடவை, இரண்டு தடவை பெயருக்கு அழைக்கப்பட்டு ஒத்திவைக் கப்படும் சட்ட நாடகம் தொடர்ந்து கொண் டிருக்கின்றது. மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளும் பிற ஆவணங்களும் எங்கிருக் கின்றன என்பது உறுதியாகத் தெரிய வில்லை. ஆயினும் அந்த வழக்கு இனியும் தொடர்ந்து நடந்து, நீதி கிடைக்கும் என்று நம்புவதற்கு கிஞ்சித்தும் இடமில்லை.

இதே கதி இப்போது செம்மணியில் இடம்பெறும் மற்றைய புதிய புதைகுழிக் கும் நேரக்கூடாது என்பதுதான் எல்லோ ருடைய பிரார்த்தனையும்.

இந்த விடயத்திலாவது நீதி கிட்டுமா, உண்மைகள் வெளிவருமா, பொறுப்பு கூறல் நிலைநாட்டப்படுமா என்பதைக் காலம்தான் கூற வேண்டும்.





# வடக்கில் உயிர்கொல்லி போதை பாவனை தொடர்பில் கேட்டறிந்த இராணுவத் தளபதி!

வடக்கில் நிலவும் உயிர்கொல்லி போதைப் பொருள் பாவனை தொடர்பில் இராணுவத் தளபதி, ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.

உயிர்கொல்லி போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு நிலையத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் ராசிக குமாரவுக்கும் இடையிலான சம்பிரதாயபூர்வ சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் இந்த விடயமும் பேசப்பட்டது.

சந்திப்பின்போது வடக்கு மாகாண ஆளுநரால் கடந்த ஆண்டு விவசாயத் தேவைக்காக விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகளுக்கு அண்மையாக அமைந்துள்ள இராணுவ வேலியை பின்நகர்த்துவதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்குரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாத போதிலும் தற்காலிக பின்னரங்க வேலியை அமைக்கப்பட்டு வருவதாகவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

மேலும், மக்களிடம் காணிகளை மீளக்கையளிக்கும்போது அங்கு களவுகள் இடம்பெறுவதாக மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர் அதற்கு அமைவான பாதுகாப்பு முன்னேற்பாடுகளுடன் அவற்றைக் கையளிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரினார்.

இந்தச் சந்திப்பின் இறுதியில் நினைவுச் சின்னங்களை ஆளுநரும், இராணுவத் தளபதியும் பரிமாறிக் கொண்டனர்.



## முன்னாள் நகரசபை உறுப்பினர் நடனதேவனின் ஏற்பாட்டில்

# “சிறுவர்களின் உலகில் இருந்து ஆரம்பிப்போம்” விழிப்புணர்வுச் செயற்றிட்டம் தென்மராட்சியில்!

(த.சுபேசன்)

முன்னாள் நகரசபை உறுப்பினரும் தொழில்நுட்ப உத்தியோகத்தருமான ம.நடனதேவனின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேசத்தில் “சிறுவர்களின் உலகில் இருந்து ஆரம்பிப்போம்” என்ற விழிப்புணர்வுச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 5 வருடங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வை தென்மராட்சியில் உள்ள அனைத்துப் பாடசாலைகளினதும் தரம் 3 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கு ஏற்படுத்தி எதிர்காலத்தில் ஆரோக்கியமான மற்றும் சூழல் நேயம் கொண்ட சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப் படுகின்றது.

அண்மையில் சாவகச்சேரி டிறிபேர்க் பாடசாலை அதிபர் தேவஈஸ்வரனிடம், முன்னாள் நகரசபை உறுப்பினர் நடனதேவன், சூழல் பாதுகாப்பு மற்றும் வாய்ப்பாட்டு மட்டை ஆகிய உள்ளடக்கிய விழிப்புணர்வுப் பிரசுரத்தை வழங்கி செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்திருந்தார்.

தொடர்ச்சியாக ஏனைய பாடசாலைகளிலும் மேற்படி விழிப்புணர்வுச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி மற்றும் லண்டனைச் சேர்ந்த வி.ஸ்ரீகரனின் நிதிப் பங்களிப்பில் சாவகச்சேரி நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் சூ.குணசாந்தனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கு அமைவாக இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.



### பெருந்தோட்டத் தொழிலாளர் பிரச்சினை

# அகிம்சை வழியில் கறுப்புப் பட்டிப் போராட்டம்; ஜுலை முதலாம் திகதி முதல் 7ஆம் திகதிவரை!

**(மஸ்கெலியா நிருபர்)**

அகிம்சை வழியில் கருப்பு பட்டி போராட்டத்தை செங்கொடி சங்கம் ஏற்பாடு செய்துள்ளது என்று அதன் தலைவர் செல்லையா சிவசுந்தரம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தம் இரத்து செய்ததன் ஊடாகப் பெருந்தோட்ட தொழிலாளர்களின் தொழில் சங்கப் பிரச்சினைகள் பேசித் தீர்மானிக்க முடியாது நீதிமன்றம் செல்ல நேரிடுகிறது. தோட்டங்களில் நிரந்திரமாகத் தொழிலாளர்கள் மற்றும் தற்காலிக தொழிலாளர்கள் நிரந்தரத் தொழிலுக்குப் பதிலாக ஏனைய பணிகள் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, பிரசவ காலப் பணக் கொடுப்பனவுகள், வைத்திய வசதிகள் ஆகிய வற்றுடன் ஏனைய வசதிகளையும் தோட்ட நிர்வாகம் சுரண்டுகிறது.

ஆகையால் இந்த அகிம்சை வழியில் நடக்கும் கருப்புப் பட்டிப் போராட்டத்தில் இலங்கையில்உள்ளஅனைத்துத்தோட்டத் தொழிலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.







# உடப்பூரில் நடைபெற்றுள்ள மாணிக்கவாசகர் குருபூசை

(உடப்பு க.மகாதேவன்)

உடப்பூர் இந்து நெறிக்கழகம் ஏற்பாடு செய்த மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வுகள் நேற்று (29) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

உடப்பு இந்து நெறிக்கழகத்தின் தலைவர் பா.முருகானந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது, ஸ்ரீ கோகுலம் அற நெறிப் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர். மாணிக்கவாசகரின் பதாதை சுமந்த வண்ணம் அற நெறி மாணவர்கள், உடப்பு ஆலய உள் வீதி, வெளிவீதி வந்து பூசையை நிறைவு செய்தனர்.







# தொற்றா நோயை ஒழிப்பதற்கான இரத்தப் பரிசோதனை நிகழ்வுகள்

(எம். எப்.நவாஸ்)

தொற்றா நோயை ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அலுவலகத்தால் அட்டாளைச்சேனை பொது நூலக வளாகத்தில் இரத்தப் பரிசோதனை அட்டாளைச்சேனை பொது வைத்திய அதிகாரி ஏ.எம்.எம். இஸ்ஸத்தின் தலைமையில் நேற்று (29) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச சுகாதார வைத்திய தாதிய உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எனப் பல உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் நூற்றுக்கான பொது மக்களும் கலந்து கொண்டு இரத்த பரிசோதனை மேற்கொண்டனர்.

# ஊட்டச்சத்து மாதத்தை முன்னிட்டு கொட்டகலையில் விழிப்புணர்வு!

(பொகவந்தலாவ எஸ் .சதீஸ்)

ஊட்டச்சத்து மாதத்தை முன்னிட்டு, கொட்டகலை சுகாதார மருத்துவ அலுவலகம், தோட்டப் பகுதி மக்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்காக, தோட்டப் பகுதி மக்களுக்கான ஊட்டச்சத்து உணவு கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை கொட்டகலை ரிஷி கேஸ் மண்டபத்தில் ஏற்பாடு செய்தது.

இந்த நிகழ்ச்சி, கொட்டகலை சுகாதார மருத்துவ அலுவலகத்தின் சுகாதார மருத்துவ அதிகாரிகள், குடும்ப சுகாதார அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார ஆய்வாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.



கோட்டகலை சுகாதார மருத்துவ அதிகாரி கே. சுதர்சன் மற்றும் உதவிச் சுகாதார மருத்துவ அதிகாரி ஜனத் அபய குணவர்தன ஆகியோர் இந்த நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

இந்த கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தோட்டப் பகுதி மக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.







# திருமலை அரச உத்தியோகத்தர்களது இடமாற்றம் திட்டமிட்டுச் செய்யப்பட்டது!

## தம்பலகாமம் பிரதேச சபை உப தவிசாளர் வி.விஜயகுமார் தெரிவிப்பு




(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாணத்தின் திருகோண மலை மாவட்டத்தில் உள்ள அரச உத்தி யோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள முறையற்ற இடமாற்றம் கண்டிக்கத் தக்கதாகும்.

இது திட்டமிடப்பட்ட இடமாற்றமாகும் என்று இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட உப தலை வரும் தம்பலகாமம் பிரதேச சபையின் உப தவிசாளருமான வி.விஜயகுமார் தெரிவித்தார்.

தம்பலகாமத்தில் உள்ள அவரது பிரத்தி யேக இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப் பின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இடம் பெற்றுள்ள அபிவிருத்தி உத்தியோகத் தர்கள், முகாமைத்துவ சேவை உத்தி யோகத்தர்களுக்கான இடமாற்றம் பேசு பொருளாக மாறியுள்ளது.

இது திட்டமிட்டு அரச உத்தியோகத் தர்கள் மீது திணிக்கப்படும் ஒரு செய லாகும். தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்வதால் வாழ்வாதார, குடும்ப நிலை என்னவாகும். இதனால் மாதாந்த சம்ப ளம் குடும்பச் செலவுக்கு போதியளவு இல்லாத நிலையில் போக்குவரத்துக்கே போதுமானதாக உள்ளது.

நாடாளுமன்றில் இதனைக் கொண்டு சென்று திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசி அவர்களுக்குக் கரம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறான நிலையில் எமது தம்பல காமம் பிரதேச பகுதியிலும் அபிவிருத்தி உத்திதோகத்தர்கள் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களும் மொற வெவ, குச்சவெளி, சேருநுவர உள்ளிட்ட இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட் டுள்ளார்கள் இதனால் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர் இதனால் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வரும் அவர்களுக்காக அருகாமையில் உள்ள இடங்களுக்கு நியாயமானதான இடமாற்றத்தை வழங்க வேண்டும்.

இல்லாது போனால் தற்போதைய மாதாந்தச் சம்பளம் குடும்பத்தை கொண்டு நடத்தவோ பிள்ளைகளைப் பராமரிக் கவோ போதியதாக இல்லாது போகும்.- என்றார்.

# நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார் பொத்துவில் முன்னாள் தவிசாளர் அப்துல் வாசித்!



(கே. எ. ஹமீட் )

பொத்துவில் முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எஸ். அப்துல் வாஸித், ஒரு வருட ஒப்பந்தத்தின் அடிப் படையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸின் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை உறுதி செய்யும் வகையில், கட்சித் தலைமைக்கும் கட்சிக் கும் உரிய நிபந்தனைகளுக்கு இணங்க சத்தியப் பத்திரம் ஒன்றில் எம்.எஸ். அப் துல் வாஸித் கையெழுத்திட்டார்.

அவருக்கான அதிகாரப்பூர்வ நிய மனக் கடிதம், நுவரெலியாவில் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப் பட்டுள்ள விடுதியில், கட்சி செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதி பதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரால் வழங்கப்பட்டது.

இந்த நியமனம், கட்சியின் உயர் மட்டத் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கட்சித் தரப்பினர் தெரிவித்தனர்.



# பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையற்ற வலயமாக கிண்ணியாவை பிரகடனம் செய்தல்!

## கிண்ணியா நகர சபையும் ஏ.எஸ்.எம். நிறுவனமும் இணைந்தன

**(முஹம்மட் றிஸ்னாத், ஹஸ்பர்)**

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையற்ற வலயமாகக் கிண்ணியாவை பிரகடனம் செய்யும் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிண்ணியா நகர சபையும் ஏ.எஸ். எம். நிறுவனமும் இணைந்து நகர சபையில் இது தொடர்பில் பல்வேறு வேலை திட்டங்களை முன்னெடுப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

அதன் ஒரு அங்கமாக கிண்ணியா வாராந்த சந்தை உட்பட மட்டக் களப்பு வீதியை அண்டிய பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டு வளர்ந்து வரும் சுற்றுலா துறைக்கும் நவீன மயமாக்களுக்கும் ஏற்ற வகையில் அப்பிர தேசத்தை பொலுத்தீன், பிளாஸ்டிக் அற்ற வலயமாகப் பிரகடனம் செய்யும் வேலை திட்டங்கள் ஆரம்பித்து வைக் கப்பட்டன.

அத்தோடு சந்தை வியாபாரிகள், வாடிக்கையாளர்கள், பொது மக்கள், பயணிகள் என பல்வேறு தரப்பினருக்கும் இது குறித்த விழிப்புணர்வை ஏற் படுத்தும் வகையில் வேலைத் திட்டங் கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நகர சபை தரிசா ளர், பிரதி தவிசாளர் மற்றும் ஏ.எஸ். எம். நிறுவன நிறைவேற்றுப் பணிப்பா ளர், உறுப்பினர்கள் கிண்ணியா நகர சபை செயலாளர், உட்பட உத்தியோகத் தர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோத உபகரணம் பயன்படுத்தி மீன்பிடித்த 30 பேர் கைதாகினர்!










**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

உள்ளூர் நீர்நிலைகளை உள்ளடக்கிய கடற்பரப்பில் மேற்கொண்ட தேடுதல் நடவ டிக்கைகளின் போது சட்டவிரோத உப கரணம் பயன்படுத்தி மீன்பிடித்த 30 பேர் கைதாகினர்.


10 டிங்கி படகுகள் மற்றும் 02 தெப் பப் படகுகள், தடை செய்யப்பட்ட மீன் பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகர ணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட முப்பது 30 உள்ளூர் மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு மேலதிக சட்ட நடவடிக் கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள் ளனர்.

இலங்கைக் கடற்படை, இலங்கை கடலோர காவல்படை மற்றும் மீன்வள மற்றும் நீர்வளத் திணைக்களத்துடன் இணைந்து, கடந்த இரண்டு வாரங்க ளில் (ஜூன் 09 முதல் ஜூன் 20 வரை) முன் னெடுக்கப்பட்ட நடவடிக்கையை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மற்றும் வடமேற்கு கடற்படை கட்டளைகள், இலங்கைக் கட லோரக் காவல்படை மற்றும் மீன்வள திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் குருநகர், திருகோணமலையில் உப்புரல், கும்புருப் பிட்டி, பொதுக்கட்டுவ மற்றும் நிலாவெளி, முல்லைத்தீவில் அளம்பில் மற்றும் நாயாறு, மட்டக்களப்பில் பாலமின்மடு மற்றும் புத்தளத்தில் புளியங்குடா குளம் ஆகிய கடற்கரைகள் மற்றும் கடல் பகுதி களை உள்ளடக்கிய பகுதிகளில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளின் மூலம் கடற் படையால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள், மீன்கள், கடலட்டைகள் மற்றும் மீன்பிடி படகுகள் யாழ்ப்பாணம், திருகோணமலை, ஈச்சிலம்பட்டு, முல் லைத்தீவு, குச்சவெளி, மட்டக்களப்பு, மாமுனை வடக்கு மற்றும் கற்பிட்டி ஆகிய இடங்களில் உள்ள மீன்வள மற்றும் நீர்வளத் துறை அலுவலகங்களில் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டனர்.

நிலாவெளி பகுதியில் கடற்படையால் கைப்பற்றப்பட்ட வெடிபொருள்கள் மேல திக சட்ட நடவடிக்கைகளுக்காக சர்தா புர சிறப்பு பணிக்குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.





# இன்றுவரை..!

தோண்டக் கிழங்குவரும்
வளம்சூழ்ந்த நம் அயலில்
தோண்ட... எலும்புகளின்
கூடுவரும் துயர்க்காலம்!
சுடலைதான்
'எரிக்கும் சுடலைதான்'
அதற்குளின்று
கிடைப்பதுவோ...

தாட்ட எலும்புகளின் நதிமூலம்!
இன்றுவரை 'முப்பத்து மூன்று'
எத்தனைதான்
இன்னும் வரவுளதோ?
இதுபோல எங்கெங்கு
மனிதப் 'புதையல்கள்'
மறைந்து கிடக்கிறதோ?
இனம்,மதம், மொழி, சாதி
இவற்றில் தெரிகிறதோ?

யாரிவர்கள்?
ஏன் சாய்க்கப்பட்டார்கள் இவர்கள்?
யார் எப்ப புதைத்தார்கள்?
ஏன் இங்கே புதைந்தார்கள்?
காணாமற் போனவரா?
கடத்தப்பட்டவரா?
தேடியவர் எங்கே?
சிறுவர் – பெரியவராய்
வாடியதன் காரணம்தான் என்ன?
இவர் வெற்றிடத்தை
மூடியதா காலம்?

முன்னே....
தனித்தனியாய்,
ஒன்றோடு ஒன்றாய்,
உயரங்கள் வேறுவேறாய்,
சின்னவர் பெரியவர் சேர்ந்தபடி,
பாடசாலைப்
பையோடு சிறு உருவம்,
பக்கத்தில் நொருங்கிக்
கைவளையல் சில,
இன்னுமென்ன
வகைவகையாய்...
வரவுள்ளன தொடர்ந்து?

இவை சாட்சிகளாய் ஊர்க்கு
அறையவுள்ள உண்மையெது?
இவை சுமந்த வதை, அவலம்...
மரணபயம், வலி, நோ, ஓலமிந்த
மண்ணோடு
கரைந்து சிதைந்துக்க...
தம் கதையை உலகுக்கு
உரைக்க முயன்றுளதா
ஒவ்வொன்றும்?
அவற்றினது
இறுதிமூச்சு இன்றும்
இக் காற்றில்
அலைந்திருக்கா?

**த.ஜெயசீலன்,**
**பிரதேச செயலர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்.**
**29.06.2025**

# மன்னாரில் சுற்றுச் சூழல் தொடர்பில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்!

## யூஎன்டிபி திட்டத்தின் முக்கியஸ்தர் சிங்கிலேயர் பீற்றர் தெரிவிப்பு



**( வாஸ் கூஞ்ஞ )**

தற்பொழுது மன்னாரில் சுற்றுச் சூழலை பாதுகாக்க வேண்டிய கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்பட்டு வருகின்றோம் என்று சுற்றுச் சூழல் விழிப்புணர்வு கருத்தமர்வில் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் யூஎன்டிபி திட்டத்தின் முக்கியஸ்தராக திகழும் சிங்கிலேயர் பீற்றர் தெரிவித்தார்.

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தினால் யூஎன்டிபி அனுசரனையுடன் கிராமிய மட்ட அமைப்புக்களான மன்னார் உப்புக்குளம் மாதர் சங்கம் , உப்புக்குளம் கிராமிய அபிவிருத்தி ஆண்கள் சங்கம் , உப்புக்குளம் மெதடிஸ்த ஆலய சங்கத்தினர் மற்றும் இஸ்லாமிய மாதர் சங்க ஆகியோருக்கு உப்புக்குளப் பகுதியில் சுற்றுச் சூழல் விழிப்புணர்வு பயிற்சி கருத்தமர்வை நடத்தியது.

இந்தக் கருத்தமர்வுக்கு சிங்கிலேயர் பீற்றர் வளவாளராகக் கலந்து கொண்டார். இதில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றாடல் சூழல் தற்பொழுது உலக அரங்கில் மாசுபடுகிறது. யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் அணு ஆயுதங்களால் காற்றில் மாசுகள் ஏற்படுகின்றன. இது தென்கிழக்கு ஆசியாவுக்கும் பரவக்கூடும் அபாயம் காணப்படுகின்றது.

அத்துடன் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குப் புறப்பட்ட கப்பல் ஒன்று இடையில் கடலில் தாண்டமையால் அதிலிருந்த இரசாயனங்கள் தலைமன்னார், தாழ்வுபாடு, கீரி, வங்காலை போன்ற இடங்களில் காணப்பட்டன.

அத்துடன் நாட்டில் ஏற்படும் அனர்த்தங்களால் இலங்கையும் குறிப்பாக மன்னார் பகுதியும் பாதிக்கும் அபாயம் காணப்படுகின்றது. ஆகவே இது தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய அவசியம் உண்டு.

உலகம் தற்பொழுது கூடுதலான வெப்பம் அதிகரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருவதால் வடதுருவத்திலுள்ள ஐஸ் கட்டிகள் உருகி கடலுக்குச் செல்வதால் கடல் மட்டமும் உயர்ந்துக் கொண்டு செல்லுகின்றது.

இதனால் மாலைத்தீவு, இந்தோனேசியா மற்றும் மன்னார் தீவுகளும் கடலுக்குள் மூழ்கும் அபாயமும் காணப்படுகின்றது.

ஆகவே கடல் அரிப்பு ஏற்படாதிருக்க தற்பாதுகாப்புக்குக் கண்டல் தாவரம் மன்னார் கடல் பிராந்தியங்களில் அழியாதிருக்க பாதுகாக்க வேண்டிய அவசியமும் எமக்கு உண்டு.

முன்பு மன்னார் கடற்கரையோரங்களில் கண்டல் தாவரங்கள் அதிகமாக காணப்பட்டன. இதனால் இருபத்தைந்து வீதமான கடலரிப்பு மன்னாரில் தடுக்கப்பட்டது.

ஜப்பான் அரசால் அண்மைக் காலத்தில் மன்னார் தீவு நுழைவு பாலம் நிர்மானிக்கப்பட்டபோது இங்கு இரு மருங்கிலும் அதிகமாக காணப்பட்ட கண்டல் தாவரங்கள் இதனால் அழிக்கப்பட்டன.

மீண்டும் இந்தக் கண்டல் தாவரத்தை இவ்விடத்தில் நடுகை செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் நிதி ஒதுக்கீடு இன்மையால் அவை சாத்தியமாகவில்லை.

இருந்தும் தற்பொழுது இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்ட நிலையில் நடப்பட்ட கண்டல் தாவரங்களில் முப்பது வீதமான தாவரங்கள் வளர்ந்து வருகின்றன.

குப்பைக் கூழங்களை தரம் பிரித்து அவற்றை மீழ் சுழற்சிக்கு அனுப்பிச் செயல்படுத்தும்போது சுற்றுச் சூழலை பாதுகாக்க முடியும்.

அடுத்து எம் மத்தியில் இருக்கும் குளங்களையும் நாம் துப்பரவாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.– என்றார்.



# ஒபரேஷன் சிந்தூரில் இந்தியா இழந்த விமானம் குறித்து காங்கிரஸ் கேள்வி

இந்தியா - பாகிஸ்தான் இடையே கடந்த மே மாதம் நடைபெற்ற போரில் இந்திய விமானப்படையில் எத்தனை போர் விமானங்கள் சேதம் அடைந்தன என்ற விவரத்தை தெரிவிக்க வேண்டும் என மக்களவை காங்கிரஸ் தலைவர் ராகுல் கேள்வி எழுப்பினார்.

முப்படை தளபதி ஜெனரல் அனில் சவுகான் ஏற்கெனவே அளித்த பேட்டியில்,

"இந்தியாவின் 6 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது என பாகிஸ்தான் கூறுவது முற்றிலும் தவறான தகவல். தாக்குதல் உத்திகளில் ஏற்பட்ட தவறுகளை சரி செய்து, அனைத்து வகை விமானங்களையும் பயன்படுத்தி பாகிஸ்



தானின் தொலைதூர பகுதிகளில் துல்லிய தாக்குதல் நடத்தினோம்." என்றார்.

இந்நிலையில் இந்தோனேஷியாவில் சிறப்பு பணிக்கு அனுப்பப்பட்ட இந்திய கடற்படை கப்டன் சிவ குமார் என்பவர் சமூக ஊடகத்தில் விடுத்த செய்தியில்,

"பாகிஸ்தான் மீதான தாக்குதலில், அரசியல் தலைமையின் கட்டுப்பாடு காரணமாகத்தான், இந்திய விமானப்படை போர் விமானங்களை இழந்தது." என கூறி இருந்தார்.

இதை மேற்கோள் காட்டியுள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் பவன் கெரா,

"இந்தோனேஷியாவுக்கான இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரி மற்றொரு அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார். உண்மையில் இந்தியா எத்தனை விமானங்களை இழந்தது? இந்த விவகாரம் குறித்து சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தை கூட்டி விவாதிக்க வேண்டும் என்ற எங்களின் கோரிக்கையை அரசு தவிர்த்தது. பாதுகாப்பு விஷயத்தில் சமரசம் செய்யப்பட்டதை அவர்கள் அறிவர். இதை காங்கிரஸ் வெளிப்படுத்தும் என அரசு பயப்படுகிறது." என்றார்

## தற்கொலைப் படைத் தாக்குதல்:

# பாகிஸ்தான் குற்றச்சாட்டுக்கு இந்திய மத்திய அரசு மறுப்பு

பாகிஸ்தானில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலுக்கு இந்தியா மீது குற்றம் சாட்டப்பட்டதற்கு, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும், அந்தக் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ளது.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"பாகிஸ்தான் இராணுவத்தின் அதிகாரபூர்வமான அறிக்கையை பார்த்தோம். அதில் ஜூன் 28 இல் நடந்த வஜீரிஸ்தான் தாக்குதலுக்கு இந்தியாவை குற்றம்சாட்டி உள்ளது. இந்தியா இந்தக் குற்றச்சாட்டை



முற்றிலும் நிராகரிக்கிறது. அதோடு கண்டனமும் தெரிவிக்கிறது." எனக் கூறப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த 2021 முதல் பாகிஸ்தானில் தலிபான்களின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. பாகிஸ்தான் தாலிபான் என்ற தனி அமைப்பு இந்த தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானை அண்மித்த கைபர் பக்துன்வா மாகாணத்தின் வடக்கு வஜீரிஸ்தான் மாவட்டத்தில் ஈராணுவ வாகனங்கள் மீது வெடிப்பொருள்கள் நிரப்பப்பட்ட வாகனத்தை தற்கொலைப் படைத் தீவிரவாதி மோதியதில், இராணுவ வீரர்கள் 16 பேர் கொல்லப்பட்டனர். மேலும், பொதுமக்கள், உள்ளூர் அரசாங்க அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் உள்பட 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இந்த தாக்குதலுக்கு ஹபிஸ் குல் பகதூர் குழு பொறுப்பேற்றுள்ள நிலையில் அதன் பின்னணியில் இந்தியா இருப்பதாக பாகிஸ்தான் இராணுவம் பரபரப்பான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# 4 ஆண்டுகளில் 63 சிலைகள் 11 மணிமண்டபங்கள் அமைப்பு

## தமிழக அரசு பெருமிதம்

தியாகங்கள் புரிந்த தீரர்கள், அறிஞர்கள், தலைவர்களை போற்றி 4 ஆண்டுகளில் 63 சிலைகள், 11 மணிமண்டபங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைத்துள்ளார் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக நேற்று தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆற்றிய பணிகளில் சிறந்த பணி, பல்லாயிரக்கணக்கான தலைமுறைகளுக்கும் தனித்தோங்கி நிற்கும் பணி, தென்கோடி குமரி முனையில் திருவள்ளுவருக்கு உலகமே கண்டு வியக்கும் வண்ணம் 133 அடி உயரத்தில் நிறுவி 2000 ,ஆம் ஆண்டு ஜனவரி 1 திறந்து வைத்தார்.

கருணாநிதி வழியில், ஆட்சியை



பார் முழுதும் பாராட்டும் வண்ணம் நடத்தி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்தியத் திருநாட்டின் எழுச்சிக்கு விதையாக வித்தாக அமைந்த சுதந்திர போராட்ட தியாகிகள், அன்னை தமிழ் மொழியை காத்திட ஆருயிர்கள் தந்து போராடிய அற்புத தியாகிகள் அனைவரையும் போற்றி பாராட்டும் பெருமைக்குரிய சின்னங்களாக சிலைகளையும், மணிமண்டபங்களையும் தமிழகம் முழுவதிலும் ஏராளமாக ஏற்படுத்தி வருகிறார். இவை அனைத்தும் எதிர்காலத் தலைமுறை இளைஞர்களுக்கு நல்வழி காட்டி உணர்வூட்டும் உயிரோவியங்களாகும்.

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பதவி ஏற்ற நாளில் இருந்து இதுநாள் வரை நாட்டுக்காகவும், தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட பெருமக்களின் தியாகங்களை வருங்கால இளைஞர்கள் அறிந்து போற்றி பின்பற்றும் வண்ணம் 63 சிலைகள், 11 மணிமண்டபங்களை அமைத்ததுடன் மேலும் 28 தியாகிகளுக்கு சிலைகளும் 12 அரங்கங்களும் அமைத்து வருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும்: ஹமாஸ் அமைப்பிடம் ட்ரம்ப் வலியுறுத்தல்



காசா விவகாரத்தில் இஸ்ரேல் - ஹமாஸ் தீவிரவாதிகள் இடையில் போர் நிறுத்தம் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் பணயக் கைதிகளை ஹமாஸ் விடுவிக்க வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்து உள்ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் நடைபெற்றுக் கொண்டிருந்த இசை நிகழ்ச்சியில் ஹமாஸ் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 1,200 பேர் கொல்லப்பட்டனர் என இஸ்ரேல் தெரிவித்தது. மேலும், இளம்பெண்கள் உட்பட 251 இஸ்ரேலியர்களை ஹமாஸ் தீவிரவாதிகள் பணயக் கைதிகளாக பிடித்து சென்றனர்.

இதையடுத்து காசா மீது இஸ்ரேல் இராணுவம் கடுமையாக தாக்குதல் நடத்தியது. இதுவரை இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் 56,000 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கிடையில், அணுஆயுத சர்ச்சை தொடர்பாக ஈரான் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. தற்போது ஈரான் - இஸ்ரேல் போர் நிறுத்தம் அறிவித்துள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிட்ட அறிவிப்பில்,

"காசா தொடர்பாக இஸ்ரேல் - ஹமாஸ் இடையே ஒரு வாரத்தில் போர் நிறுத்தம் ஏற்பட வாய்ப்புள்ளது. அதற்கான பேச்சுவார்த்தையில் இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு ஈடுபட வேண்டும்.

மேலும், இஸ்ரேல் பிணைக் கைதிகளை ஹமாஸ் தீவிரவாதிகள் உடனடியாக விடுவித்து போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு வரவேண்டும். போர் நிறுத்தம் தொடர்பாக இறுதி ஒப்பந்தத்தை இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு முடிவு செய்ய வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# வான்வெளியை திறந்தது ஈரான்





ஈரான் தனது மத்திய மற்றும் மேற்கு வான்வெளியை சர்வதேச விமானங்களுக்காக மீண்டும் திறந்துள்ளதாக ஈரானிய வீதிகள் மற்றும் நகர மேம்பாட்டு அமைச்சரகம் அறிவித்துள்ளது.

ஈரானின் தெஹ்ரான் மற்றும் பிற பகுதிகளில் இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்களைத் தொடர்ந்து ஜூன் 13 அன்று ஈரான் தனது வான்வெளியை மூடியது. 12 நாள் மோதலுக்குப் பிறகு, இரு தரப்பிற்கும் இடையே போர் நிறுத்தம் எட்டப்பட்டது.

இந்நிலையில் ஈரானிய சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் ஒப்புதல் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளின் பாதுகாப்பு மதிப்பீடுகள் முடிந்ததைத் தொடர்ந்து வான்வெளியை திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஈரானிய சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் ஒப்புதல் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளின் பாதுகாப்பு மதிப்பீடுகள் முடிந்ததைத் தொடர்ந்து வான்வெளியை திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.





# இரண்டு பயணிகள் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

## 40 பேர் உயிரிழப்பு

தான்சானியாவின் கிளிமஞ்சாரோ பகுதியில் 2 பயணிகள் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் இரண்டு பஸ்களும் தீப்பிடித்து எரிந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனால் பஸ்களிலிருந்த பயணிகள் வெளியில் வரமுடியாமல் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த விபத்தில் 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்காக சென்ற பஸ் ஒன்று, தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக வேகக் கட்டுப்பாட்டை இழந்து, எதிரில் வந்த பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கனடா முரசு
திங்கட்கிழமை | 30/06/2025

**கரடியை விரட்டிய நாய்: வைரலாகும் காணொலி**

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தின் மிஷன் நகரில் கரடி ஒன்றை சிறு நாயொன்று விரட்டியடித்துள்ளது.

நகரில் வசிக்கும் 02▶



# கனடா, வாங்கூவர் விமான நிலையத்தில் வளப் பற்றாக்குறை; விமானங்கள் தாமதம்

**கனடாவின் வாங்கூவர் சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்படும் அல்லது வருகின்ற பயணிகள், தங்களின் விமான நிலைமையை பரிசோதிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.**

**வளப் பற்றாக்குறை காரணமாக விமான அட்டவணைகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.**

நிறுவனத்தின் விமான போக்கு வரத்து கட்டுப்பாட்டு ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக, விமான நிலையத்தில் பரவலான தாமதங்கள் ஏற்பட்டன.

இதனால், கனடாவின் விமான பாதுகாப்பு சேவை மற்றும் அமெரிக்க நுழைவுச் சோதனை பிரிவு தங்கள் சேவை நேரத்தை நீட்டித்தன.

உணவகங்கள் கூட தேவைக்கேற்ப மேலதிக நேரம் திறந்து வைக்கப் பட்டன.

விமான நிலையம் வெளியிட்ட புதுப்பிப்பில், குறைந்த பணியாளர் சிக்கல்கள் தீர்க்கப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டாலும், அதன் தாக்கம் தொடரும் என எச்சரிக்கப்பட்டுள் ளது.

இதைத் தொடர்ந்து சில விமானங் களின் அட்டவணைகளில் மாற்றங் கள் ஏற்படலாம். எனவே, பயணத் திற்கு முன்னர் உங்கள் விமான நிறுவனத்துடன் நேரடி நிலையில் தொடர்பு கொண்டு, நிலைமையை உறுதிப்படுத்தவும் என வாங்கூவர் விமான நிலைய இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் நான்கு வாகனங்கள் மோதி விபத்து; இருவர் காயம்

டொரோண்டோவில் உள்ள டான் வாலி பார்க்வே நெடுஞ்சாலையில் நான்கு வாகனங்கள் மோதிய பாரிய விபத்தில் இரண்டு பேர் காய மடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்கள் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

டான் மில்ஸ் வீதிக்கு அருகே உள்ள நெடுஞ் சாலை பகுதியில், இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

30 வயது மதிக்கத்தக்க பெண் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றொரு நபர் சிறிய காயங்களுடன் சிகிச்சை பெற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்திற்கான காரணம் இதுவரை தெரிய வில்லை. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.






# சீன நிறுவனத்தை மூடுகின்றது கனடா

சீன கண்காணிப்பு கேமரா உற்பத்தியாளரான ஹிக்விஷனுக்கு தேசிய பாதுகாப்பு கவலைகள் காரணமாக கனடாவில் செயல்பாடுகளை நிறுத்த கனேடிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாக தொழில்துறை அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்துள்ளார்.

ஹாங்சோ ஹிக்விஷன் டிஜிட்டல் டெக்னாலஜி கோ என்றும் அழைக்கப்படும் ஹிக்விஷன், சீனாவின் ஜின்ஜியாங் பிராந்தியத்தில் உய்குர் மக்கள் மற்றும் பிற முஸ்லிம் சமூகங்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு உதவியாக பல துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டதாக அங்குள்ள சமூக செயற்பாட்டாளர்கள் கூறிவருகின்றனர்.

இதையடுத்து கடந்த ஐந்தரை ஆண்டுகளாக அந்நிறுவனத்தின் உபகரணங்கள் மற்றும் பரிவர்த்தனைகளுக்கு அமெரிக்கா ஏராளமான தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இந்நிலையில் தற்போது அதன் அண்டை நாடான கனடாவில் அதன் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள ஜோலி, "கனடாவில் ஹிக்விஷன் நிறுவனம் தொடர்ந்து செயல்படுவது கனடாவின் தேசிய பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கும் என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது," என்று கூறியுள்ளார்.

கனடாவின் பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை வழங்கிய தகவல்களை பல கட்ட மதிப்பாய்வு செய்த பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் சீனா அல்லது ஜின்ஜியாங் பற்றி குறிப்பிடப்படவில்லை அல்லது ஹிக்விஷன் கனடாவின் தேசிய பாதுகாப்பை எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்தும் குறிப்பிடவில்லை.

அதேவேளையில், "கனடாவின் இந்த முடிவு தங்களுக்கு கவலையளிப்பதாகவும், இது அடிப்படை ஆதாரமற்ற, நியாயமற்ற செயல் என்றும் இதில் வெளிப்படைத் தன்மை இல்லை" என்றும் ஹிக்விஷன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், "எங்கள் தொழில்நுட்பத்தை அதன் சைபர் பாதுகாப்பு தகுதிகளின் அடிப்படையில் மதிப்பிடுவதற்குப் பதிலாக, எங்கள் நிறுவனம் எந்த நாட்டைச் சேர்ந்தது என்பதை வைத்து கனடா அரசு செயல்படுவதாகத் தெரிகிறது, இது பரந்த புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் சீன நிறுவனங்களுக்கு எதிரான நியாயமற்ற சார்புகளை பிரதிபலிப்பதாக உள்ளது" என்றும் அந்நிறுவனம் குற்றம்சாட்டியுள்ளது.



## கரடியை...

(C01 தொடர்ச்சி)

மாட் பெர்னெட் என்பவரின் வீட்டுத் தோட்டத்தில் கரடிகள் அடிக்கடி வந்து செல்லுவது சாதாரணமான ஒன்று எனத் தெரிவிக்கின்றார்.

ஆனால் கடந்த சனிக்கிழமை, ஒரு கரடி குப்பைத் தொட்டிக்குள் நுழைய முயன்றபோது, வீட்டின் நான்கு வயதான சிறிய நாய் 'லின்கன்' நம்பிக்கையோடு அதனை எதிர்த்தது என தெரிவித்துள்ளார்.

லின்கன் என்பது யோர்கி மற்றும் சிஹுவாஹா கலப்பின நாய் என குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கரடி குப்பை தொட்டியைக் கழற்ற முயன்றபோது, லின்கன் நேராக கரடியை நோக்கி ஓடிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லின்கன் என்ற அந்த நாய் கரடியை துரத்தியடித்துவிட்டு வீடு திரும்பியதாக வீட்டு உரிமையாளர் தெரிவிக்கின்றார்.

இந்த சம்பவம் காணொலியாக எடுக்கப்பட்டு இணையத்தில் பதிவேற்றப்பட்டதும், பெரும் எண்ணிக்கையிலானவர்கள் பார்வையிட்டுள்ளனர்.





# கனடாவில் வேலைக்காக காத்திருக்கும் நீண்ட வரிசை

கனடாவில், வெறும் 6 பணியிடங்களுக்காக, நீண்ட வரிசையில் காத்திரும் நிலை இருப்பதாக இந்திய பெண் ஒருவர் சமூக வலைதளத்தில் வெளியிட்ட காணொலி தற்போது வைரலாகி வருகிறது.

கனடாவில் சாதாரண வேலைக்கு கூட நீண்ட வரிசையில் நூற்றுக்கணக்கானோர் காத்திருக்கும் காணொலியை அங்குள்ள இந்திய பெண் ஒருவர் இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ளார். அந்த

மேற்படி காணொலியில் அந்தப் பெண் குறிப்பிடுகையில்,

“வெளிநாடுகளில் வாழ்க்கை என்பது பலருக்கும் கனவாகவே இருக்கும். ஆனால் சில நேரங்களில் அது இப்படி வெறும் நீண்ட வரிசையாகக்கூட இருக்கும். இது சர்வதேச மாணவர்களிடையே வேலை வாய்ப்புக்கான கடுமையான போட்டியை எடுத்துக்காட்டுகிறது.

வெளிநாடுகள் ஏராளமான வேலை வாய்ப்புகளையும் சிறந்த வாழ்க்கை முறையையும் உத்தரவாதம் அளிக்கின்றன என்று இந்தியர் பலர் பொதுவான நினைக்கிறார்கள்.

இங்குள்ள நிலைமையை பார்த்தால் உங்களுக்கே புரியும், வெளிநாடு சென்றுள்ளவர்கள் வேலைக்கு எப்படி காத்திருக்கிறார்கள் என்று தெரியும். இது கனடாவின் யதார்த்தம். நீங்கள் இதற்குத் தயாராக இருந்தால், கனடாவுக்கு வாருங்கள், இல்லையெனில் இந்தியா சிறந்தது என்பது புரியும்.” என அந்த தெரிவித்துள்ளார்.



# டொரோண்டோ பஸ்ஸில் பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு; பொலிஸ் வலைவீச்சு

பஸ்ஸில் பெண் ஒருவரை பாலியல் தொந்தரவு செய்தார் என கூறப்படும் ஒரு நபரை டொரோண்டோ பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த சம்பவம் யூனியன் பஸ் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது.

இந்த சம்பவம் குறித்து ஒரு அழைப்பு கிடைத்ததாகவும், பஸ் எண் 4432 இல் பயணம் செய்த பெண்ணிடம், ஒரு நபர் பாலியல் தொந்தரவும் மேற்கொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபருக்கு வயது: 35 முதல் 45 வரை இருக்கும் எனவும், உயரம்: 5 அடி 6 அங்குலம் எனவும், தலைமுடி: கறுப்பு, குறுகியது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் குறித்த தகவல்கள் உள்ளவர்கள் டொரோண்டோ பொலிஸாரைத் தொடர்புகொண்டு தகவல் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.